# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
********

முறையீட்டு மனு எண்: 1073/2016/பே–2
ஆணை நாள். 09 –07–2018

திரு. எஸ். சத்தியஞானம்,
17, சுத்துக்குழி – கிழக்குத் தெரு,
பூதவராயன்பேட்டை அஞ்சல்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம். –– முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம். –– எதிர் மனுதாரர்.

ஆணை.

கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி, 17. சுத்துக்குழி பகுதியினை சேர்ந்த திரு.S சத்தியஞானம், தனது 25.12.2015ம் தேதிய புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.12.2015 அன்று பெறப்பட்டது. மேற்படி மனுவிற்கு முறையீட்டு மனு எண். 1073/2016 என எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனுவின் மீது அறிக்கைகள் பெறப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

திரு.S சத்தியஞானம், தனது முறையீட்டு மனுவில் கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி மன்றத்தின் மீது பல்வேறு முறைகேடுகளை தெரிவித்து இம்முறைகேடுகளுக்கு பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் பொறியாளர் ஆகியோர் உடந்தையாக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி புகார் மனு தொடர்பாக கடலூர் மாவட்டம், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண்:அ.1/329/2015/நாள்.20.01.2016ன் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் கீழ்கண்டவாறு பெறப்பட்டுள்ளது.

1. புவனகிரி பேரூராட்சியில் நடைபெற்று வரும் அனைத்துப் பணிகளும் பேரூராட்சி மன்ற ஒப்பதலுடன் நடைபெற்று வருவதாகவும், பணி ஆய்வாளர், உதவிப் பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரின் மேற்பார்வையின்பேரில் பணிகள் நடைபெறுவதாகவும் இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.
2. ஒப்பந்தப் பணிகள் யாவும் பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள் மூலம் மட்டுமே நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார்.
3. ஒப்பந்தக்காரர்களுக்கு பணிகள் முடிக்கப்பட்டு உதவி செயற்பொறியாளரின் கையொப்பமிட்ட பிறகே பட்டியல் தொகை குறுக்கு கோடிட்ட காசோலை மூலம் வழங்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.
4. பொதுமக்களின் தேவைகள் மன்ற உறுப்பினர்கள் வாயிலாக பேரூராட்சி மன்றம் மூலம் தெரிவு செய்யப்பட்டு தீர்மானிக்கப்படுவதாகவும் அதன்படியே பணிகள் நடைபெறுவதாகவும் தனது அறிக்கையில் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து மேற்படி முறையிட்டு மனுதாரர் தனது 19.10.2016ம் நாளிட்ட கடிதத்தில், தனது நிலத்திற்கு போகும் பகுதியில் ஆடு அடிக்கும் கூடம் கட்டி, அப்பகுதி மக்களின் எதிர்ப்பால் திறக்காமல் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனது வார்டில் போடப்பட்டுள்ள குடிநீர் மினி டேங்க் ரூ.2.00 லட்சம் மதிப்பீடு எனவும், புவனகிரி பேரூராட்சி பல பகுதிகளில் போடப்பட்டுள்ள மின் டேங்க் ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் போட்டுள்ளதாகவும், புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரிடம் தகவல் பெறும் உரிமை சட்டத்தின் கீழ் பெறப்பட்ட கடிதங்களை இணைத்தும், தனது கடிதத்தினையே தனது வாக்குமூலமாக எடுத்துக் கொள்ளவும் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 19.09.2017ம் நாளிட்ட கடித்தில் மேற்கண்ட முறையீட்டு மனுதாரரின் 19.10.2016ம் நாளிட்ட கடித நகலினை புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு அனுப்பிவைக்கப்பட்டு இதன் மீதான விளக்கக் கடிதத்தினை சமர்ப்பிக்கத் தெரிவித்து ஆணையிடப்பட்டது.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். அ.1/478/2017 நாள் 06.10.2017ன் மூலம் முறையீட்டு மனுதாரரின் 19.10.2016ம் நாளிட்ட கடிதத்திற்கான விளக்க அறிக்கை கீழ்கண்டவாறு இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

1. புவனகிரி பேரூராட்சி வார்டு எண்-18ல் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆடு அடிக்கும் தொட்டி 2011-12ம் ஆண்டு உள் கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதிதிட்டத்தின் கீழ்பேரூராட்சிகளின்இயக்குநர்,அவர்களின்ந.க.எண். 15083/2011/உ.4/நாள்.21.10.2011ன்படி நிர்வாக அனுமதி பெறப்பட்டு அதன் அடிப்படையில் 31.01.2012 அன்று விதிமுறைகளின்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.எஸ்.பழனிசாமி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்ற தீர்மான எண்.15 நாள்.27.02.2012ன்படி அங்கீகரிக்கப்பட்டு, பணி ஆணை வழங்கி உரிய கால கெடுவிற்குள் பணி முடிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் இப்பணி பணி ஆய்வாளர், உதவிப் பொறியாளர் ஆகியோர்களின் நேரடி பார்வையில் செய்து முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணியினை தொடர்புடைய பொறியியல் அலுவலர்களால் நேரடி

மேற்பார்வை செய்து, மேல் அளவுகள் செய்யப்பட்டு அளவு புத்தகம் மற்றும் பட்டியல் ஆகியவற்றின் அடிப்படையில் வேலைக்கான தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இப்பணி அனைத்தும் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளபடி முடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடு மற்றும் நிதியிழப்புகள் ஏதும் இல்லை எனவும், இக்கட்டிடம் அரசு விதிமுறைகளின்படி கல்வெட்டு பதிக்கப்பட்டு தமிழக முதல்வர் அவர்களால் 30.12.2013 அன்று காணொளி காட்சி மூலம் திறந்து வைக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013-14ன் கீழ் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண். A.3/1000/2013ன்படி நாள் 17.12.2013 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வார்டு எண் 16, சுத்துக்குழியில் சிமெண்ட் சாலை அமைக்க பொறியியல் பிரிவு அலுவலர்களால் தயாரிக்கப்பட்ட ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி பணி முடிக்கப்பட்டு இப்பணியினை தொடர்புடைய பொறியியல் அலுவலர்களால் நேரடி மேற்பார்வை செய்து மேல் அளவுகள் செய்யப்பட்டு அளவு புத்தகம் மற்றும் பட்டியல் ஆகியவற்றின் அடிப்படையில் வேலைக்கான தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும் இப்பணிகள் அனைத்தும் திட்ட மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளபடி செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் முறைகேடுகள் மற்றும் நிதி இழப்பு ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. வார்டு-16ல் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2013-14ன் கீழ் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ந.க.எண். ASLR.No./A.3/1000/2013 நாள் 13.06.2013ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு 24.07.2013ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வார்டு-16ல் சுத்துக்குழியில் ஆழ்துளை கிணறுடன் கூடிய மினிபவர் பம்பு பொறியியல் பிரிவு அலுவலர்களால் தயாரிக்கப்பட்ட ரூ.2.00 லட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு உரிய விதிமுறைகளை பின்பற்றி பணி முடிக்கப்பட்டு இப்பணியினை தொடர்புடைய பொறியியல் அலுவலர்களால் நேரடி மேற்பார்வை செய்து மேல் அளவுகள் செய்யப்பட்டு அளவு புத்தகம் மற்றும் பட்டியல்கள் ஆகியவற்றின் அடிப்படையில் பணி முடிக்கப்பட்டமைக்கான தொகை வழங்கப்பட்டுள்ளதாகவும், இப்பணிகள் அனைத்தும் மதிப்பீட்டில் வகை செய்யப்பட்டுள்ளபடி செய்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் இதில் முறைகேடுகள் மற்றும் நிதியிழப்பு ஏதும் இல்லை எனவும் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இம்முறைமன்ற நடுவ 27.11.2017ம் நாளிட்ட அழைப்பாணையில் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 06.10.2017ம் நாளிட்ட விளக்க அறிக்கையினை முறையீட்டு மனுதாரருக்கு அனுப்பிவைக்கப்பட்டு, அதன் மீதான ஆட்சேபணை/விளக்கத்தினையும், தனது முறையீட்டு மனு தொடர்பான விளக்கத்தினையும் இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 14.02.2018 அன்று நேரில் ஆஜராக தெரிவித்து ஆணையிடப்பட்டது.

14.02.2018 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜரான முறையீட்டு மனுதாரர் திரு S.சத்தியஞானம் தனது முறையீடு தொடர்பான விளக்கத்தினை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

"........தன்னால் 25.12.2015 நாளிட்ட மனு letter pad ல் ஒரு கடிதமும், 19.10.2016ல் படிவம் -1ல் உரியவாறும் மனு செய்துள்ளதாக தெரிவித்துள்ளார். தனது பெயர் சத்தியஞானம் எனவும் தான் அனுப்பிய கடிதம் அனைத்தும் தபாலில்தான் அனுப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். தனக்கு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்தில் இருந்து 27.11.2017ம் நாளிட்ட ஒரு கடிதம் மட்டுமே வந்ததாகவும், அதில் 14.02.2018ல் ஆஜராகுமாறு தெரிவிக்கப்பட்டதாகவும் வேறு எந்த கடிதமும் வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் சேர்த்து புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் 6.10.2017ம் நாளிட்ட கடிதமும் தனக்கு அனுப்பப்பட்டதாக தெரிவித்துள்ளார். புவனகிரி பேரூராட்சி 18-வது வார்டில் ஆடு அடிக்கும் கூடம் கட்டி இன்னும் திறக்கப்படாமல் உள்ளதாகவும், தான் வீட்டில் இல்லை என்றால் தனது மூத்த சகோதரி பதில் எழுதி அனுப்புவார்கள் எனவும் தெரிவித்துள்ளார். தங்கள் வார்டில் (16-வது வார்டு) குடிநீர் பம்பு மினி Tank ரூ.2.00 லட்சம் மதிப்பு என போடப்பட்டுள்ளதாகவும் ஆனால் அதனுடைய செலவு ரூ.1.10 லட்சம் மட்டுமே இருக்கும் எனவும், இது குறித்து உரிய ஆதாரங்களை 15 நாட்களுக்குள் அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்துள்ளார். 16-வது வார்டில் 2014ம் ஆண்டு ரூ.1.50க்கு சாலை அமைத்ததாகவும், மழை பெய்தவுடன் சாலையின் ஒரு பக்கத்தில் பழுது ஏற்பட்டுவிட்டதாகவும் தற்போது ஆடு அடிக்கும் கூடத்தினை பால்வாடி மையமாக நடத்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இதை திறந்து வைக்கப்பட்டதாக கல்வெட்டு அமைக்கப்பட்டுள்ளதாகவும் மினி Tank கட்டியிருக்கும் இடம் விவசாய பாதையாக பயன்படுத்தி வந்த 6 அடி வழி உள்ள இடம் எனவும் இதன் மீது தக்க நடவடிக்கை எடுக்குமாறும் தனது விளக்கத்தில் முறையீட்டு மனுதாரர் பதிவு செய்துள்ளார்.

புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். அ.1/478/2017/நாள் 12.02.2018ன்படி மேற்படி முறையீட்டு மனுதாரர் புகார் சம்பந்தமாக தனது கூடுதல் விளக்க அறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் 6.10.2017ம் நாளிட்ட அறிக்கையில் கூறப்பட்ட அதே பதில்களையே விளக்க றிக்கையாக சமர்ப்பித்துள்ளார்.

இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, புகார் மனுவிற்கான புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, முறையீட்டு மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் புகார் மனு தொடர்பாக புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் கூடுதல் விளக்க அறிக்கை ஆகியன பரிசீலிக்கப்பட்டன.

முறையீட்டு மனுதாரர் தனது 14.02.2018ம் நாளிட்ட வாக்குமூலத்தில் வார்டு எண்-16ல் அமைக்கப்பட்டுள்ள மினி Tank சம்பந்தமாக தனது ஆதாரங்களை 15 தினங்களுக்குள் அனுப்பிவைப்பதாக தெரிவித்தும், இது வரை எந்தவிதமான ஆதார ஆவணங்களை சமர்ப்பிக்கவில்லை.. மனுதாரர் தனது முறையீடு குறித்த ஆதார ஆவணங்களை சமர்ப்பிப்பதாக தனது வாக்குமூலத்தில் தெரிவித்து எந்த விதமான ஆவணங்களையும் இன்று வரை சமர்ப்பிக்காத நிலையில் சமர்ப்பிக்க ஆதார ஆவணங்கள் ஏதும் இல்லை எனக் கருதியும் புவனகிரி பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கையினை ஏற்றும் முறையீட்டு மனு தொடர்பாக தொடர் நடவடிக்கை கைவிடப்படுகிறதென தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 09 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.**

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளர்

பெறுநர்
1.திரு.S. சத்தியசீலம்,
எண்.17, கிழக்குத் தெரு,
சுத்துக்குழி,
பூதவராயன்பேட்டை அஞ்சல்,
புவனகிரி,
கடலூர் மாவட்டம் – 608 601.
2.செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி,
புவனகிரி,
கடலூர் மாவட்டம்.
3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
கடலூர் மண்டலம்,
Old Nattanmai Building,
Beach Road, Cuddalore- 607 001.